இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 94 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 28 – வெள்ளிக்கிழமை 14 நவம்பர் 2025 – கோவை ★★ 16 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 94: Thiruvalluvar Year - 2056 - Ayppasi 28 - Friday 14 November 2025 - Kovai ★★ 16 + 8 Pages ₹ 5.00

## சென்னை மாநகராட்சி சார்பில்

# தூய்மைப் பணியாளர்களுக்கு 3 வேளையும் இலவச உணவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை (நவ.15) தொடங்கி வைக்கிறார்!




கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிருவாகிகளை சந்திக்கும் நிகழ்வில், புதுக்கோட்டை, வேதாரண்யம் மற்றும் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிருவாகிகளை தனித்தனியாக சந்தித்துப் பேசினார். அப்போது கழக நிருவாகிகளுக்கு புத்தகங்களையும் வழங்கினார்.

**சென்னை, நவ.14-**

**சென்னை மாநகராட்சி சார்பில் தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச உணவு வழங்கும் திட்டத்தை நாளை (15ம் தேதி) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.**

சென்னை மாநகராட்சி சார்பில் தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச உணவு வழங்கும் திட்டத்தை நாளை (15ம் தேதி) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார். சென்னை மாநகராட்சியில் 10,000க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் பணியாற்றி வரும் நிலையில், தூய்மைப் பணியாளர்கள் அதிகாலையே தங்கள் பணியைத் தொடங்க வேண்டிய சூழலில், பணிபுரியும் இடத்திற்கே உணவை எடுத்து வந்து சாப்பிடுவதில் பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதையடுத்து, சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு 3 வேளை உணவு வழங்கும் திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டது.

காலை, மதியம், இரவு என 3 வேளைகளிலும் இலவச உணவு வழங்கும் திட்டத்திற்கு தமிழக அரசு ரூ.186.94 கோடி ஒதுக்கிடு செய்துள்ளது. அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தனியார் நிறுவனமானது, ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டது.

காலை உணவில் இட்லி, போன்றவை, மதியம் ரசம், சாம்பார், கூட்டு, இரவு சப்பாத்தி அல்லது ரொட்டி உள்ளிட்டவை அடங்கும். இந்த உணவுகள், ஊட்டச்சத்து நிறைந்தவையாக இருக்கும்.

இந்நிலையில் சென்னையில் தூய்மை பணியாளர்களுக்கு 3 வேளை இலவச உணவு வழங்கும் திட்டத்தை வரும் 15ந்தேதி (நாளை) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்க இருப்பதாக சென்னை மேயர் பிரியா தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் தூய்மைப் பணியாளர்களை தனியார் வசம் ஒப்படைக்க அரசு ஆலோசனை செய்து வந்தது. இதனை எதிர்த்து தூய்மைப் பணியாளர்கள் கடந்த சில நாட்களுக்கு முன்னர் போராட்டம் நடத்தினர். அதோடு தூய்மைப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்யக்கோரியும், ஊதிய உயர்வு வழங்கக் கோரியும் கோரிக்கை விடுத்தனர்.

இப்படியான சூழலில் தற்போது தூய்மைப் பணியாளர்கள் அனைவருக்கும் தினந்தோறும் மூன்று வேளை இலவச உணவு வழங்க தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. முதல் கட்டமாக சென்னை மாநகராட்சியில் இந்த திட்டம் தொடங்கப்பட உள்ளது. அதனை தொடர்ந்து நகர்ப்புறம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இத்திட்டம் விரிவு படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூய்மைப் பணியாளர்களின் நலனைக் காக்கும் வகையில் தமிழக அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. அதோடு இவர்களுக்கென தனி நல வாரியமும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தூய்மைப் பணியாளர்களுக்கு தினந்தோறும் மூன்று வேளையும் இலவச உணவு வழங்கும் திட்டத்திற்கு தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

**அரசாணை வெளியீடு!**

இதன்படி காலை, மாலை மற்றும் இரவு வேளைகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு தரமான இலவச உணவு வழங்கப்படும். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை சார்பாக சென்னை மாநகராட்சியில் பணி புரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச உணவு வழங்குவதற்கான அரசாணையை தமிழக அரசு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பாணையில், “தூய்மைப் பணியாளர்கள் குப்பையை அள்ளும்போது தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது என்பதால், அதற்கான சிகிச்சையைப் பெற தனித் திட்டம் செயல்படுத்தப்படும். இவர்கள் சுய தொழில் தொடங்க விரும்பினால் அதற்கு ரூ.3.5 லட்சம் மானியமாக வழங்கப்படும். அதோடு பணியின்போது உயிரிழக்கும் தூய்மைப் பணியாளருக்கு ரூ.10 லட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்படும்.

**தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும்!**

ரூ.5 லட்சம் மதிப்பிலான காப்பீட்டு திட்டம் அனைத்து தூய்மைப் பணியாளர்களுக்கும் கிடைக்கும் வகையில் செயல்படுத்தப்படும். தூய்மைப் பணியாளர்கள் ஷிப்ட் முறையில் 24 மணி நேரமும் வேலை செய்வதால், அவர்களின் பசியைப் போக்க வேண்டியது தமிழக அரசின் கடமை. ஆகையால் முதற்கட்டமாக சென்னை மாநகராட்சியில் இனி 3 வேளையும் இலவச உணவு வழங்கப்படும். படிப்படியாக இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் தூய்மைப் பணியாளர்களுக்கு சென்னை மாநகராட்சி இலவச உணவு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அவர்களுக்கு நற்செய்தியை வெளியிட்டுள்ளது.

## 155 பேர் தேர்ச்சி பெற்று

# யு.பி.எஸ்.சி. தேர்வில் தமிழ்நாட்டு மாணவர்கள் சாதனை!

## 87 மாணவர்கள் தமிழ்நாடு அரசின் பயிற்சி மையங்களில் பயின்றவர்கள்!

*சென்னை, நவ.14-*

*யு.பி.எஸ்.சி., தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 155 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் 87 மாணவ, மாணவிகள் தமிழ்நாடு அரசின் பயிற்சி மையங்களில் பயின்று தேர்ச்சி பெற்றவர்கள் ஆவர்.*

*தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள் ஒன்றிய அரசின் குடிமைப்பணிக்கான தேர்வில் அதிகளவில் பங்கேற்று வெற்றி பெற வேண்டும் என்பதற்காக கடந்த 1989ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அகில இந்திய குடிமைப்பணி பயிற்சி மையத்தை தொடங்கி வைத்தார்.*

*இதில், பலர் ஆர்வமுடன் பயிற்சி பெற்று குடிமைப்பணி தேர்வில் பங்கேற்று வெற்றிப் பெற்றனர்.*

*அதேநேரத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் போதிய முக்கியத்துவம் அளிக்கப்படாததால் தேர்ச்சி விகிதம் குறைந்தது.*

*இந்நிலையில், 2021ஆம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைந்த திராவிட மாடல் அரசு, குடிமைப் பணி தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்தோர் அதிகளவில் பங்கேற்று வெற்றிப் பெற வேண்டும் என்பதற்காக ‘நான் முதல்வன்’ திட்டம் மூலம் பயிற்சியும், பல்வேறு கல்வி நிதியுதவிகளும் வழங்கி வருகிறது. இதனால் பலர் பயன்பெற்று வருகின்றனர்.*

*இ ந் நி லை யி ல் , 2025ஆம் ஆண்டுக்கான யு.பி.எஸ்.சி., முதன்மை தேர்வு நாடு முழுவதும் நடைபெற்று, தேர்வு முடிவுகள் நேற்று முன்தினம் இணைய தளத்தில் வெளியிடப்பட்டன.*

*இந்த தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 155 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.*

*இதில், தமிழ்நாடு அரசுப் பயிற்சி மையங்களில் பயின்ற 87 பேரும் அடங்குவர். யு.பி.எஸ்.சி. தேர்வில் தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு 136 பேர் தேர்ச்சி பெற்ற நிலையில், இந்த ஆண்டு தேர்ச்சி பெற்றோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. யு.பி.எஸ்.சி., தேர்வில் தமிழ்நாட்டின் தேர்ச்சி விகிதம் 13 புள்ளி 97 சதவிகிதம் அதிகரித்து 77 புள்ளி பூஜ்ஜியம் 8 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.*

*தமிழ்நாடு அரசுப் பயிற்சி மையங்களில் பயிற்சி பெற்று கடந்த ஆண்டு 35 புள்ளி 29 சதவிகித மாணவர்கள் யு.பி.எஸ்.சி. தேர்வில் வெற்றி பெற்ற நிலையில், இந்த ஆண்டு 54 புள்ளி 84 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. யு.பி.எஸ்.சி. தேர்வில் தமிழ்நாட்டு மாணவர்களின் சாதனை என்பது தமிழ்நாடு அரசின் முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றி என்று பல்வேறு தரப்பினரும் பாராட்டு தெரிவித்துள்ளனர். தங்களது கனவை நனவாக்கிய தமிழ்நாடு அரசுக்கும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் யு.பி.எஸ்.சி., வெற்றியாளர்கள் மனமார்ந்த நன்றி தெரிவித்துள்ளனர்.*

## பாஜக ஆளாத மாநிலங்களில் ஊடகங்கள்




## கார் வெடிப்பு சம்பவத்தின் பின்னணி குறித்து ஆராய முழுமையான விசாரணை தேவை!

# கார் வெடிப்பு சம்பவம் நாட்டின் பாதுகாப்பு அமைப்பு தோல்வி!

## காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் விமர்சனம்!

திருவனந்தபுரம், நவ. 14–

கார் வெடிப்பு உள்துறை அமைச்சர் அமித்ஷா வின் தார்மீக பொறுப்பு எங்கே சென்றது? என்று காங்கிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

நாட்டில் இனி பயங்கரவாதத் தாக்குதல்கள் நடைபெறாது என்று கடந்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் உள்துறை அமைச்சர் அமித்ஷா உறுதியளித்தார். அப்போது, பயங்கரவாதத் தாக்குதல்களை சாதாரணமாக கருத வேண்டாம் என்று நாங்கள் எடுத்துரைத்தோம். நாட்டின் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. எதிர்பாராதவிதமாக தலைநகர் டெல்லியில் கார் வெடிப்பு சம்பவம் நிகழ்ந்து விட்டது. இச்சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டுமென காங்கிரஸ் வலியுறுத்துகிறது.

டெல்லி கார் வெடிப்பு சம்பவத்தின் பின்னணியில் உள்ள உண்மையான காரணத்தை அறிய நாட்டு மக்கள் விரும்புகின்றனர்.

வலிமையான விசாரணை அமைப்பை உருவாக்க ஒன்றிய அரசு முன்வர வேண்டும் நாட்டின் பாதுகாப்பு அமைப்பு தோல்வியடைந்திருப்பதை தெளிவாக காண முடிகிறது உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் தார்மீக பொறுப்பு எங்கே சென்றது? என்று காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் விமர்சித்துள்ளார்.